படிப்புதவித் தொகைகள் வழங்குதல், (ii) பொருள், பெயர், தலைப்பு ஆகியவற்றுடன் அடங்கிய விரிவான நூல் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்கு நிதிகள் ஒதுக்குதல். (iii) அந்நூலகத்தை ஆராய்ச்சி நிலையமாகத் தரம் உயர்த்துதல், (iv) அந்நூலகத்திற்குத் தனிப்பட்ட கட்டிடம் ஒன்றைக் கட்டுதல் ஆகியவற்றிற்கான செயற்குறிப்பு எதும் அரசிடம் உண்டா ?

(இ) தனிப்பட்டவர்களிடம் தற்போதுள்ள ஏட்டுச் சுவடிகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) (i)லிருந்து (iii) வரை இல்லை.

(iv) அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகத்திற்காகக் கட்டிடம் கட்டும் கருத்துரு ஒன்று 1974-ல் பரிசீலிக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது.

(இ) கையேட்டுப்படிகள் குறிப்பிட்ட நபரிடம் இருக்கும் விவரம் கியூரேட்டருக்குத் தெரிந்தபின் அவர் அதை வாங்கிப் பாதுகாக்க ஆவன செய்வார். சென்னையில் வசிக்கும் நபருடன் அதை வாங்க நேர்முகமாகத் தொடர்பு கொள்ளப்படும்.

Attenders working in Aided Schools.

* 205 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the attenders working in the aided schools have made a representation to give them a basic pay of Rs. 146; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள் தங்களுக்கு ரூ. 146 அடிப்படைச் சம்பளம் கொடுக்குமாறு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.